# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம் (இருப்பு) ஸ்ரீவில்லிபுத்தூர்</u>.
# L.A.O.P.No. 402/2022

2026-ம் ஆண்டு ஜீலை மாதம் 27-ம் நாள் மனுதாரா் சாட்சியின் வாக்குமூலம். 1969-ம் வருடத்திய சாட்சிய சட்டம் பிரிவு 5-ன் ஏற்பாட்டின்படி திரு.சௌந்திரபாண்டியன், பெஞ்ச கிளார்க் கிரேடு 1 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.மாரியப்பன் | ஜாதி | : |
| த.பெ /க.பெ | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| தாலுகா | : | வயது | : |

27.07.2026

**கோ.சா.1**

**<u>முதல் விசாரணை</u> :-**

நான் இந்த மனுவில் கோருரிமையாளர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். 12.07.2021ம் தேதி சர்வே எண்கள் 240/4, 241/4, 241/8, 242/1க்குரிய S.L.R ன் நகல் **கோ.சா.ஆ.1** ஆகும். 20.11.2014 ம் தேதி பொம்மையா நாயக்கர் இறப்பு சான்றிதழின் அசல் **கோ.சா.ஆ.2** ஆகும். 01.04.1999ம் தேதி கஞ்சம்மாள், சுப்புராஜ் ஆகியோர்கள் முனீஸ்வரி என்பவருக்கு கிரையம் செய்த கிரையப் பத்திரம் (ஆவண எண்.1576/1999)ன் சான்றிட்ட நகல் **கோ.சா.ஆ.3** ஆகும். 01.04.1999ம் தேதி கஞ்சம்மாள், சுப்புராஜ் ஆகியோர்கள் பரமசிவம் என்பவருக்கு கிரையம் செய்த கிரையப்பத்திரம் (ஆவண எண்.1577/1999) ன் சான்றிட்ட நகல் **கோ.சா.ஆ.4** ஆகும். 09.09.1984ம் தேதி கோருரிமையளார் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா (பட்டா எண்.394,399) (எண்ணம் 2 வரிசை)ன் அசல் **கோ.சா.ஆ.5** ஆகும். 22.03.2000ம் தேதி ஆர்ஜித நிலத்திற்கான தீர்வை ரசீதின் அசல் **கோ.சா.ஆ.6** ஆகும். ஆதார் கார்டு ஜெராக்ஸ் **கோ.சா.ஆ.7** ஆகும். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) மனுப்படி உத்தரவாக வேண்டும் என வேண்டுகிறேன்.

<u>நில ஆர்ஜித அதிகாரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

சர்வே எண்.240/4D–ல் உள்ள சொத்து ஆதியில் கந்தசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கந்தசாமி நாயக்கரின் மகன் பொம்மைய நாயக்கரின் சொத்துக்கள் வாய்மொழி பாகத்தின்படி கிடைத்தது என்றால் சரிதான். பொம்மைய நாயக்கருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி சுப்பம்மாள், இரண்டாவது மனைவியின் பெயர் கஞ்சம்மாள் ஆவார்கள். சுப்பம்மாளுக்கு, பெரிய முத்துலட்சுமி, சின்னமுத்துலட்சுமி, மாரியம்மாள், மாரியப்பன் ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். கஞ்சம்மாள் என்பவருக்கு பாப்பா, ராஜம்மாள், ரவி, சுப்புராஜ், முத்து மொத்தம் 9 நபர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். பொம்மைய நாயக்கரின் வாரிசு சான்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. பொம்மைய நாயக்கர் உயிருடன் இருக்கும்போது எந்த தேதி, எந்த நாளில் வாய்மொழி பாகம் செய்து கொண்டோம் என்றால் 15 வருடங்களுக்கு முன்பே நாங்கள் பாகம் செய்து கொண்டோம். எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுளள பட்டா எண். 394, 399 எனது பெயருக்கு 1985 ல் வழங்கப்பட்டது. அந்த உத்தரவின் நகல் எனது கைவசம் உள்ளது, அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன், அதை பார்த்தால் உண்மை தெரிய வரும் என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களை பொருத்து பொம்மைய நாயக்கரின் மனைவி கஞ்சம்மாளின் மகன் இழப்பீட்டுத் தொகையை பொம்மைய நாயக்கரின் வாரிசுகளுக்கு சமமாக வழங்க வேண்டும் என ஆர்ஜித அதிகாரியிடம் ஆட்சேபனை மனு செய்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு ஆட்சேபனை செய்த காரணத்தினால்தான், ஆர்ஜித நிலத்திற்குண்டான இழப்பீடு தொகையான ரூ.5,89,501/–ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். கோ.சா.ஆ.3 மற்றும் கோ.சா.ஆ.4 ல் கண்ட சொத்துக்கள் ஆவணத்தில் 1 ம் இலக்கமிட்டவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லி, 1 ம் இலக்கமிட்டவரும், அவருடைய மகனும் மேற்படி சொத்துக்களை

கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தில் உள்ள சொத்துக்களுக்கும், பொம்மைய நாயக்கருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் 10(1) அடங்கலில் அவர் பெயர் உள்ளது. அதனால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட சர்வே எண்களுக்கு நான் உரிமை கோரும் இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், எல்லா வாரிசுதாரருக்கும் சமமாக கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.